# நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை

## 2017 யூலை 01 ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை

**2018 ஆம் ஆண்டுக்கான நிதித் தேவை மதிப்பீடு**

மாகாணங்களால் சமா்ப்பபிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட மூலதன மற்றும் மீண்டுவரும் தேவைமதிப்பீடுகளுக்கான மீளாய்வுக்கூட்டம் அனைத்து மாகணங்களின் அதிகாரிகளுடன் நடாத்தப்பப்பட்டு தேவைகளின் மதிப்பீடுளுக்கான பொதுவான தீா்மானம் ஒன்று நிதி ஆணைக்குழுவினாலும் ஒவ்வொரு மாகாணங்களினாலும் எடுக்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டின் தேவை அடிப்படையில் நிதி அமைச்சின் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு இது அறிவிக்கப்பட்டுள்ளது.

**2018 ஆம் ஆண்டுக்கான சிபாரிசுகள்**

- 2018ஆம் ஆண்டுக்கான சிபாரிசுகள் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு 2018ஆம் ஆண்டுக்கான மூலதன மற்றும் மீண்டுவரும் பகிா்விற்காக ஜனாதிபதியின் அலுவலகத்திற்கு சமா்ப்பிக்கப்பட்டது

- நிதி ஆணைக்குழுவினது பரிந்துரையின் அடிப்படையில் தேசிய திறைசேரியானது மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களுக்கான மொத்த ஒதுக்கீட்டினை வழங்கும் தீா்மானத்தினை எடுக்கும்

**2017 ஆண்டுக்கான மாகாண வருடாந்த அபிவிருத்தித்திட்டங்களின் திருத்தம்**

மாகணங்களின் வேண்டுகோளுக்கு இணங்க 2017 ஆம் ஆண்டுக்கான மாகாண வருடாந்த அபிவிருத்தித்திட்டங்களின் பரந்த செயற்பாட்டுத்திட்டத்தில் திருத்தம் செய்வதற்கு இணக்கம் வழங்கப்பட்டது

**நிதி ஆணைக்குழுவின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை**

நிதி ஆணைக்குழுவின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் பதிப்புகள் இடப்பட்டு மாண்புமிகு ஜனாதிபதிக்கும் மற்றும் பாராளுமன்றிற்கும் சமா்ப்பிக்கப்பட்டது

**மாகாண கணக்காய்வு அறிக்கை தயாரிப்பு**

கணக்காய்வாளா் நாயகத்தின் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட ஊவா மற்றும் வட மேல் மாகாணங்களுக்கான மாகாண கணக்காய்வு அறிக்கைகள் கிரமமாக ஆய்வுசெய்யப்பட்டு கணக்காய்வாளா் நாயகம் பிரதம செயலாளா் மற்றும் ஆளுனா் ஆகியோருக்கு அனுப்பப்பட்டது.

**அதிகாரிகளின் திறன் விருத்தி**

**பயிற்சி**

- நிதி ஆணைக்குழுவினது அதிகாரிகள் பின்வரும் பயிற்சிகளில் பங்குபற்றினாா்கள்.
  - ✓ நூலக முகாமைத்துவம்
  - ✓ சம்பளப்பட்டியல்
  - ✓ ஏல கொள்வனவு ஆவணங்கள் தயாரித்தல்
  - ✓ கோப்பு முகாமைத்துவம் மற்றும் பொது அலுவலக முகாமைத்துவ
  - ✓ மைக்ரோ சொவ்ற் எக்சல்
  - ✓ ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரித்தகவல் முகாமைத்திட்ட அமைப்பு (ITMIS)

**பொது தனியாா் கூட்டுப்பங்கேற்பு (PPP) பயிற்சியாளருக்கான பயிற்சி (TOT)**

- **USAID** மற்றும் நிதிஅமைச்சின் பொது நிதித் திணைக்களம் என்பவற்றின் ஏற்பாட்டில் ஆகஸ்ட் 28-31 ஆந் திகதிகளில் கொழும்பு ஹில்ற்றன் ரெசிடன்சிஸ் (Hilton Colombo Residences)இல் பொது தனியாா் கூட்டுப்பங்கேற்பு பயிற்சியாளருக்கான பயிற்சி இடம் பெற்றது இது திறனை வளா்க்கும் முயற்சிகளின் நிலைத்தன்மையினை உறுதிப்படுத்தும் ஒரு முயற்சியாகும்

**UNDP பங்களிப்புடன் மாகாணங்களின் திட்டமிடல் முறைமைத் திறனை மேம்படுத்தல்**

- UNDP இனது பங்களிப்புடன் மாகாணத் திட்டமிடல் முறைமைத் திறன் மேம்பாட்டுக்கான 2018 ஆம் ஆண்டுக்கான திட்டமிடல் வழிகாட்டுதல்களைத் தயாரிப்பதற்கான ஆரம்ப ஆலோசனைக் கலந்துரையாடல் இடம்பெற்றது இதன்படி UNDP நிதிஆணைக்குழுவிற்கு உதவ ஒரு TOR ஐ அபிவிருத்தி செய்து 2018 ஆம் ஆண்டுக்கான மாகாணத் திட்டமிடல் வழிகாட்டுதல்களை வல்லுனர்களுடன் இணைந்து தயாரிப்பதற்கு ஒப்புக்கொண்டது

**JICA உடனான கலந்துரையாடல்**

- நிதிஆணைக்குழுவின் அதிகாரிகளின் திறன் மேம்பாட்டிற்கு சாத்தியமான உதவியினைப் பெறுவதற்கு JICA உடன் கலந்துரையாடல் இடம் பெற்றது இதில் JICA இனது சிரேஸ்ட ஆலோசகர் திரு.ஷக்கானோ, கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் பொதுக்கொள்கைத்திணைக்களம், திரு ஹொண்டா சுறிச்சிறோ, JICA இனது தந்திர உபாயத்திட்டமிடல் ஆலோசகர் தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியோர் பங்குபற்றினார்கள்

**விருந்தினர் விரிவுரை**

- லோவா பல்கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியரும் மற்றும் விலை நிலைத்தன்மைக்கான முன்னைநாள் உதவி ஆளுனர் இலங்கை மத்திய வங்கி அவர்கள் பொதுப் பொருளாதாரக் கொள்கையும் பொது நிதியும் பற்றிய ஒரு விளக்கத்தினை முன்வைத்தார் இதில் கொள்கைத் தேவைப்பாடு மற்றும் கொள்கை வடிவமும் நடைமுறைப்படுத்தலும் கொள்கை ஏற்றுக்கொள்ளலும் அரசின் பொருளாதார செயற்பாடுகளும் ஆகியவை உள்ளடக்கப்பட்டன





- திரு சாரா முத்துகல USAID இன் கொள்முதல் பொது மற்றும் தனியார் பங்கேற்பு (PPP) ஆலோசகர் பொது மற்றும் தனியார் பங்கேற்பின தேவைப்பாடு மற்றும் இலங்கையின் அண்மைய தனியார் முதலீடுகள், பாரம்பரிய நிதி மற்றும் பொது மற்றும் தனியார் பங்கேற்பின் அடிப்படையும் வேறுபாடுகளும் பற்றிய ஒரு விளக்கத்தினை முன்வைத்தார்.

**கல்விச் சுற்றுலா**

- இலங்கை நிர்வாக சேவைக்கு புதிதாக உள்ளீர்ப்பு செய்யப்பட்டவர்கள் மற்றும் நேபாள அரசாங்கத்தின் 6 அதிகாரிகள் நிதி ஆணைக்குழுவிற்கு கல்விச்சுற்றுலாமேற்கொண்டு இலங்கை பன்முக அதிகாரத்தின் கீழ் நிதி ஆணைக்குழுவின் பங்கு, அதன் செயற்பாடு, மாகாணங்களுக்கான நிதிப்பரிந்துரை செயல் முறை, திட்டமிடல் மற்றும் வரவுசெலவுத்திட்ட வழிமுறைகள் , மாகாணங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் , மாகாணங்களின் வருவாய்கள் , உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிதியளித்தல் , மாகாணங்களின் ஆளணி என்பன பற்றி அறிந்து கொண்டார்கள்





- நிதி ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெகிவளை மவுன்லவினியா மாநகர சபைக்கு விஜயம் மேற்கொண்டு மாநகர சபையின் பங்கு, பணிகள் , எதிர் நோக்கும் சிக்கல்கள் , அவர்களின் நிர்வாக கட்டமைப்பு மற்றும் வருமான மூலங்கள், முகாமைத்துவ ஆளணி, வரவுசெலவுத்திட்ட முறைமைகள் , அபிவருத்தித்திட்டங்களின் செயற்பாடுகள், நூலக முகாமைத்துவம் , முன்பள்ளிக்கல்வி நலன்புரிச்செயற்பாடுகள் , சேமிப்பு மற்றும் முதலீடுகள் போன்ற முக்கிய செயற்பாடுகள் பற்றி அறிந்து கொண்டனர்





**நிதி ஆணைக்குழுவினது புதிய அலுவலக கட்டட நிர்மாணம்**

நிதி ஆணைக்குழுவுக்கான புதிய கட்டட வேலைகள் முன்னேற்றகரமாக உள்ளன. நிதி ஆணைக்குழுவினது 3 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மேலும் 3 தொழில்நுட்ப கூட்டங்கள் திட்ட வேலைப்பகுதி ஆலோசனைக் குழுவினதும் மற்றும் மொறட்டுவ பல்கலைக்கழக கட்டட நிர்மாண பீடத்தினரதும் மற்றும் ஒப்பந்தகாரரதும் பங்களிப்புடனும் இடம் பெற்றது. அனுமதிக்கப்பட்ட ரூபா 300 மில்லியனில் ஒக்ரோபர் 30 வரை ரூபா 107 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. திட்டமிடப்பட நிகழ்ச்சி திட்டமானது 115 நாட்கள் பின் நோக்கிய நிலையில் உள்ளது எனவே ஆணைக்குழு வாராந்த மீளாய்வுக் கூட்டங்களை ஒழுங்கு படுத்துமாறு ஆலோசகர்களுக்கு வேண்டுகோளினை முன்வைத்துள்ளது



**நிதி ஆணைக்குழுவினது தரவுத்தளம் MIS**

நிதி ஆணைக்குழுவினது தரவுத்தளம் செயற்படுவதில் ஒரு திறமையான இயங்கு முறை இல்லை எனவே ஆசியா பவுண்டேசன் (TAF)நிறுவனம் நிதி ஆணைக்குழுவுடன் செய்த ஒப்பந்தத்தின் படி தனது ஆதரவினை வழங்க சம்மதித்துள்ளது. அதன்படி தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப முகவர் நிலையத்துடன்(ICTA) இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு அமைய தரவுத்தளம் MIS விரிவான முறையில் உருவாக்கப்படும்

**நிதி ஆணைக்குழுவினது சட்ட வரைபு**

சட்ட வரைபு உருவாக்கப்பட்டு மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கு 09.11.2016 இல் சமர்ப்பிக்கப்பட்டது ஜனாதிபதியின் செயலகம் சட்ட வரைபு பற்றிய சில அவதானிப்புகளை அனுப்பியுள்ளது. எனினும் நிதி ஆணைக்கழுவினது இறுதிச் சட்ட வரைபில்சில தாமதங்கள் ஏற்பட்டதனால் 2017 ஜீலை 18இல் மேலதிக செயலாளர் (சட்டம்) அவர்களுடன் இது பற்றிக் கலந்துரையாடப்பட்டது. எவ்வாறாயினும் சட்ட வரைவினது முக்கிய விடயங்கள் மேலதிக செயலாளர் (சட்டம்) அவர்களால் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுவதனை நிதி ஆணைக்குழு விரும்பவில்லை எனவே நிதி ஆணைக்குழு 2017 செப்ரெம்பர் 12இல் தனது கருத்துக்களை கவனத்துக்காக முன்வைத்து முடிவுகளுக்காக காத்திருக்கிறது.

**கணக்காய்வு முகாமைத்துவக் குழுவினை நியமித்தல் மற்றும் செயற்படுத்தல்**

கணக்காய்வு முகாமைத்துவக்குழு நியமிக்கப்பட்டது இரண்டு முன்னேற்ற கூட்டங்கள் கணக்காய்வாளர் அதிபதி பணிப்பாளர் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களம் ஆகியவற்றின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது. தேவையான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கூட்டங்களின் தீர்மானங்கள் அனைத்து நிதி ஆணைக்குழுவினது அலுவலர்களுக்கும் அறிவிக்கப்பட்டது

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தினது (NPD) ஒத்துழைப்புடன் திட்டமிடல் மற்றும் கண்காணிப்புக்கான வழிகாட்டல் தயாரித்தல்**

தேசிய மற்றும் உப தேசிய மட்டங்களில் ஒரு ஒருங்கிணைந்த திட்டமிடல் நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதனை நோக்கமாக கொண்டு ஒவ்வொரு துறைக்கும் உப துறைக்கும் உரிய திட்டமிடல் படிவங்களின் வரைபு மற்றும் கருத்துத்தாள் தயாரிக்கப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்தினது மூத்த அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது. மேலும் இது ஏனைய தொடர்புடைய நிறுவனங்களினது ஒத்துழைப்புடன் விருத்தி செய்யப்படும்

**2017 ஆகஸ்ட் மாதம் 17 மற்றும் 18 ஆந் திகதிகளில் வடமேல் மாகாணத்திற்கான (NWP) தற்போதைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வருடாந்த அபிவிருத்தித்திட்டங்களின் கலந்துரையாடல் மற்றும் கள விஜயம்**

முதலமைச்சர், அமைச்சர்கள், பிரதம செயலாளர், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் பிரதிப்பிரதம செயலாளர்கள், நிதி ஆணைக்குழுவினது தலைவர், செயலாளர் மற்றும் அதிகாரிகள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு ஆளணி மற்றும் தேசிய மட்டத்தில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய கொள்கைகள் பற்றி கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது

அதன்பின்னர் நிதி ஆணைக்குழுவினது அதிகாரிகள் கள விஜயத்தினை மேற்கொண்டு கல்கமுவ புதிய வைத்தியசாலை மற்றும் அம்பன்பொல விவசாய கால்நடைப்பண்ணை வாரியபொல முன்பள்ளி மற்றும் பிரதேச சபை குளியாபிட்டியில் அமைந்துள்ள மாகாண சிறுவர் நன்நடத்தை திணைக்களத்தின் சிறுவர்இல்லம் கொபேகான் நீர் வளங்கல் திட்டம் எனபவற்றினை மேற்படி 17 மற்றும் 18 ஆந் திகதிகளில் பார்வையிட்டனர். சில திட்டங்கள் தொடர்பில் விசேட கண்காணிப்பும் அவதானமும் செலுத்த வலியுறுத்தப்பட்டது.





**கல்கமுவ தள வைத்தியசாலை**





**கல்கமுவ வாரியபொல திண்மக்கழிவகற்றல் நிலையம்**

**சிறுவர் நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு தொடர்பாக மாகாண சிறுவர் நன்நடத்தை திணைக்கள ஆணையாளர்களுடனான கூட்டம்**

2017 செப்ரெம்பர் 15 ஆம் திகதி நிதி ஆணைக்குழுவில் மாகாண சிறுவர் நன்நடத்தை அமைச்சின் செயலாளர்கள் மற்றும் மாகாண சிறுவர் நன்நடத்தை திணைக்கள ஆணையாளர்களுடனான கூட்டம் இடம் பெற்றது. மாகாண பிரதிநிதிகள் மாகாண மட்டத்தில் தமக்குள்ள பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடி உரிய பரிந்துரைகள் வழங்க ஒரு வாய்ப்பினை ஏற்படுத்துவதே இக் கூட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

**தேசிய மற்றும் மாகாண மட்டங்களுக்கு இடையில் உகந்த ஒருங்கிணைப்பு மூலம் அபிவிருத்திச் செயன்முறையை மேம்புடுத்தல் பற்றிய பட்டறை பின்தொடர்**

ஜீன் 15 2015 அன்று நடைபெற்ற பட்டறைகளில் தீர்மானம் செய்யப்பபட்ட முடிவுகள் பரிந்துரைகளுக்கு அமைவாக நிதி ஆணைக்குழுவினால் அடையாளங்காணப்பட்ட பிரச்சினைகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் ஒரு பட்டியலை தயார் செய்துள்ளது செயற்பாட்டுத்திட்டத்துடன் சரிபார்க்கும் பட்டியலும் ஜனாதிபதியின் செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது இதன் விளைவாக ஜனாதிபதியின் செயலாளர் பட்டறைகளில் செய்யப்பபட்ட தீர்மானப் பரிந்துரைகளின் முன்னேற்றத்தினை பற்றி கலந்துரையாட 2017 செப்ரெம்பர் 15 ஆம் திகதி கூட்டத்தினைக் கூட்டினார். சம்மந்தப்பட்ட அமைச்சுக்களின் மூத்த அதிகாரிகள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர். ஜனாதிபதி செயலகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இதன் முன்னேற்றத்தினை நிதி ஆணைக்குழு மீளாய்வு செய்தது.

**நிதி ஆணைக்குழுவினது செயலாற்றுகை அறிக்கை**

2017 ஆம் ஆண்டின் 2ஆவது அரை ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது

**விசேடகற்கைகள்**

நிதிஆணைக்குழுவினால் பலசிறப்புக்கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன அவை பின்வருமாறு

- சில மாநகரசபைகள் மீதான கற்கை
- மூலதன நிதிப்பயன்பாடு மீதானகற்கை
- மாநகரசபைகளினது நிதி சமமின்மை மீதானகற்கை
- சமமான பிராந்திய அபிவிருத்திக்கான வரைவிலக்கணம்

**ஆணைக்குழுவினது உறுப்பினரது கூட்டங்கள்/ஊழியர்களுக்கான கூட்டங்கள்/ இணைக்குழுவிற்கான கூட்டங்கள்**

- **ஆணைக்குழுவினது உறுப்பினரது கூட்டங்கள்** - 2017 யூலை 7ஆம் திகதி, 2017 ஆகஸ்ட் 3 ஆம் திகதி,2017 ஆகஸ்ட் 19 ஆம் திகதி மற்றும் 2017 செப்ரெம்பர் 30 ஆம் திகதி

முடிவெடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கும் துணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆணைக்குழுவின் கூட்டத்திற்கு முன்னராக துணைக்குழு சந்திப்பினை நடாத்துகின்றது

- **இணைக்குழுவிற்கான கூட்டங்கள்** - வாராந்தம் இணைக்குழுவின் கூட்டங்கள் இடம்பெற்றன
- **ஊழியர்களுக்கான கூட்டங்கள்** - 2017 யூலை 13ஆம் திகதி, 2017 யூலை 21ஆம் திகதி, 2017 யூலை 26ஆம் திகதி மற்றும் செப்ரெம்பர் 7 ஆம் திகதி